بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 21/04/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இறைஞானமிக்க வழிகாட்டல்களின் ஒளியில் இறையச்சத்திற்கான விளக்கமும் அதைப் பெறுவதற்கான வலியுறுத்தலும்**
**ஜுமுஆ அன்று எத்தகைய அருளுக்குரிய ஒரு நேரம் வருகிறது என்றால், அதில் என்ன துஆ கேட்கப்பட்டாலும் அது ஏற்றுக் கொள்ளப்படுகிறது.**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝١ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝٢ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝٣ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝٤ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝٥

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝٦ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝٧

ரமலான் கடந்து விட்டது. பல மக்கள் ரமலானில் இபாதத் செய்வதற்கும், தம்முள் சிறப்பான மாற்றத்தை உருவாக்குவதற்கும் திட்டங்கள் வகுத்திருந்திருப்பார்கள். ஆனால், நினைத்த அளவுக்கு அவர்களால் அதன் படி அமல் செய்ய முடியவில்லை. பல மக்கள் இவ்வாறு எனக்கு கடிதம் எழுதுகிறார்கள்.

ஜுமுஆ நாள் எத்தகைய அருளுக்குரிய நாள் என்றால், அதில் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான சிறப்பான நேரம் இருக்கக்கூடிய ஒரு தருணம் வருகிறது. எனவே, நமது ரமலானின் நாள்கள் நாம் ஆசை கொண்டிருந்தது போன்று கழியவில்லை என்றாலும் அல்லது ஒரு நம்பிக்கையாளரின் ரமலான் எவ்வாறு கழிய வேண்டுமோ அவ்வாறு கழியவில்லை என்றாலும், பிறகும்கூட இன்று நாம் இவ்வாறு உறுதி மொழி எடுக்க வேண்டும்.

மேலும், 'அல்லாஹ் நம்முடைய பலவீனங்களை கண்டும்காணாமல், நம் மீது கருணை புரிந்தவாறு, அல்லாஹ் நம்மிடம் எதிர்பார்க்கும் அந்த வழியில் நாம் நிரந்தரமாக நமது வாழ்வை செலுத்தக்கூடியவர்களாக ஆவதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்கிட வேண்டும்' என்று துஆவும் செய்ய வேண்டும்.

அல்லாஹ்வோ மிகவும் கருணையாளன் ஆவான். அவன் நம்முடைய துஆக்களை ஏற்றுக் கொள்வதற்கு, ரமலான் மாதத்தில் ஜுமுஆ நாளில் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய ஒரு நேரம் வருகிறது எனக் கூறவில்லை. மாறாக, ஜுமுஆ நாளின் 'பொதுவான சிறப்பாக' இதைக் கூறியுள்ளான்.

எனவே, இன்று நாம், ‘நாங்கள் இந்த ரமலானுக்குப் பிறகும் எங்களது இறையச்சத்தின் தரத்தை அதிகரித்துக் கொண்டே இருப்போம்; அதற்காக முயற்சி செய்வோம். அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்து கொண்டே இருப்போம். அடுத்த ஜுமுஆ வரை எங்களுடைய இபாதத்களை அல்லாஹ்வுக்காக மட்டுமே மேற்கொண்டு வருவோம். பிறகு, ஒவ்வொரு ஜுமுஆவின் இடைப்பட்ட காலத்தை எங்களுடைய இபாதத்கள் மற்றும் நல்ல செயல்களால் அலங்கரிப்பதற்கு முயற்சி செய்வோம். உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை அளிப்போம். மேலும், நாங்கள் எங்களிடம் தூய மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காக, ரமலான் மாதத்திற்காக உருவாக்கியிருந்த; ஆனால், ஏதாவது ஒரு காரணத்தினால் அதன்படி செயல்பட முடியாமல் போன அந்த நிகழ்ச்சியை அடுத்த ரமலான் வரை நிறைவு செய்வதற்கு முயற்சி செய்து கொண்டே இருப்போம், என்று நம்முடைய துஆக்களில் உறுதி எடுத்தோம் ஆயின், இந்த அமல்தான் உண்மையான இறையச்சத்தை உருவாக்கும்.

நாம் கலப்பற்றவர்களாக ஆகி நம்முடைய இபாதத்கள் மற்றும் நம்முடைய நற்செயல்களை அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக நிறைவேற்றுபவர்களாக இருக்கும் போது, பிறகு, கருணையாளர்களில் எல்லாம் பெரிய கருணையாளன் ஆன, ரஹ்மான் ஆன, ரஹீம் ஆன அல்லாஹ் நமக்கு, எவற்றின் படி நாம் இந்த ரமலானிலும் ஓரளவு அமல் செய்தோமோ அந்த பரக்கத்துகளை வழங்கி கொண்டே இருப்பான்.

ஆக, இறையச்சம் அசல் விஷயமாகும். நிரந்தர தன்மையுடன் இறைவனின் கட்டளைகள் படி அமல் செய்வது அசல் விஷயமாகும். இறைவன் மீதான அச்சம் மற்றும் அவனது திருப்தியைப் பெறுவது அசல் விஷயமாகும். இது இருக்கிறது என்றால், மேலும், நாம் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை இருப்பதை மறந்துவிடக்கூடிய அந்த உலகவாதத்திற்கு நாம் திரும்பிச் சென்று விடவில்லை என்றால், பிறகு, நம்முடைய இபாதத்கள் மற்றும் நமது சீர்திருத்தத்திற்கான முயற்சியை நாம் எந்த அளவு மற்றும் எப்படி இந்த ரமலானில் செய்தோமோ அல்லாஹ் அவற்றை ஏற்றுக் கொண்டவாறு நமக்கு வழங்கிக் கொண்டே இருப்பான்.

எனவே, இது அடிப்படை கருத்தாகும். இதை நாம் எப்பொழுதும் முன் நிறுத்த வேண்டும். இந்த நோக்கத்தைப் பெறுவதை ஒவ்வோர் அஹ்மதியும் எந்நேரமும் தன் முன் வைத்திருக்க வேண்டும். நாம் சுயம் நம் வாழ்வை இறையச்சத்தின் படி செலுத்துவதற்கும், அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவும் கழிக்கும் போது, நாம் நம்முடைய பிள்ளைகள் மற்றும் சந்ததிகள் முன்னும் எப்படிப்பட்ட முன்மாதிரியை முன்வைப்போம் என்றால், அதன் மூலம் நன்மைகள் ஒரு சந்ததியில் இருந்து மற்ற சந்ததிக்குக் கிடைத்துக் கொண்டே செல்லும்.

இறையச்சமே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அதிகம் அழுத்தம் கொடுத்த நோக்கம் ஆகும். நமது இறையச்சத்தின் தரம்

உயர வேண்டும் என்பதற்காகவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அனுப்பப்பட்டுள்ளார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் (அலை) கூறினார்கள்:

உண்மை மற்றும் ஈமானின் காலம் மீண்டும் வர வேண்டும் என்பதற்காகவும் உள்ளங்களில் இறையச்சம் உருவாக வேண்டும் என்பதற்காவும் நான் அனுப்பப்பட்டுள்ளேன். ஆகவே, இந்த செயல்கள் தான் எனது தோற்றத்தின் அசல் நோக்கமாகும். எனவே, அன்னாரது காலகட்டமானது நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் மீது நிலைநின்றவாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகள் படி கியாமத் வரை இருக்கக்கூடிய காலமாகும். அதில் அன்னாரை ஏற்றுக் கொண்டவர்களே உண்மையில் நிலைநின்றவாறு தமது இபாதத்களின் உயர்தரத்தை நிலைநாட்ட வேண்டும்.

இந்த நோக்கம் வெறும் ஒரு மாதத்தின் இபாதத்கள் அல்லது நன்மைகள் செய்வதற்கான முயற்சிகளால் கிடைக்காது. நாம் நம்முடைய இபாதத்களில் நிரந்தரத்தன்மையை மேற்கொண்வாறு நிலைபெற்று விட்டால், இந்த மக்களைப் பற்றி தான் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு, 'நான் உம்முடனும் உம் அன்பர்களுடனும் இருக்கிறேன்' என்று கூறினான்.

எனவே, நாம் இந்த வகையில், நம் வாழ்வைக் கழித்து வந்தால், பிறகு, நாம் நம்முடைய அமல்களால் உலகிற்கு, 'நீங்கள் அல்லாஹ்வுடன் உண்மையான தொடர்பை உருவாக்க விரும்பினால், வாருங்கள்! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்த உண்மை அடியாரை ஏற்றுக் கொள்ளுங்கள்' என்ற தூதுச் செய்தியை வழங்கிக் கொண்டிருப்போம்.

உண்மையான இறையச்சம் எது? அதன் படி நடக்கக்கூடியவர் எப்படி இருப்பார்? அல்லாஹ் அவருடன் எப்படி நடந்து கொள்கிறான் ஆகியவை தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

உண்மையான இறையச்சத்துடன் அறிவீனம் ஒன்றிணைய முடியாது. உண்மையான இறையச்சம் தன்னுடன் ஓர் ஒளியைக் கொண்டிருக்கிறது. இது குறித்து மேன்மை பொருந்திய அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் இறையச்சமுடையவர்களாக இருப்பதில் நிலைத்து நின்றால், அல்லாஹ்வுக்காக இறையச்சம் எனும் பண்பில் நிலைநின்றால் மற்றும் உறுதிப்பாடு மேற்கொண்டால், அல்லாஹ் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் வித்தியாசம் ஏற்படுத்தி விடுவான். அந்த வித்தியாசம் என்னவென்றால், உங்களுக்கு ஓர் ஒளி வழங்கப்படும். அந்த ஒளி உங்களுடைய செயல்கள், சொற்கள், ஆற்றல்கள் மற்றும் புலன்கள் ஆகியவற்றில் வந்து விடும்.

உங்களது அறிவிலும் ஒளி இருக்கும். உங்களது புரிதலிலும் ஒளி இருக்கும். உங்களுடைய கண்களிலும் ஒளி இருக்கும். உங்களுடைய காதுகள், உங்களுடைய நாவுகள், உங்களுடைய கூற்றுகள், உங்களுடைய ஒவ்வோர் அசைவுகள் மற்றும் அசைவின்மையிலும் ஒளி இருக்கும். ஆக, இந்தத் தரத்தைத்தான் ஒரு நம்பிக்கையாளர், ஓர் இறையச்சமுடையவர் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ரமலான் கடந்து விட்டது என்றாலும், நாம் அந்தத் தரத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்ய முடியும். நம்மில் அந்தத் தரத்தைப் பெற்றுவிட்டவர்கள் நற்பாக்கியம் பெற்றவர்கள் ஆவார்கள்.

நாம் நினைவில் கொள்ள வேண்டும்! இந்தக் காலம் குறிப்பாக, ஷைத்தானின் தாக்குதலுக்கான காலமாகும். அவன் தனது அனைத்து சதித்திட்டங்கள், சூழ்ச்சிகள் மற்றும் ஆயுதங்களால் தாக்குதல் தொடுக்கிறான். இத்தகைய சூழ்நிலையில், நாம் முன்னரை விட அதிகம் அல்லாஹ்வின் பக்கம் குனிய வேண்டிய தேவை உள்ளது.

டி.வி ஆகட்டும், சமூக ஊடகம் ஆகட்டும் அல்லது இதர நிகழ்ச்சிகள் ஆகட்டும், பிள்ளைகளின் பள்ளிக்கூடம் மற்றும் அவர்களுடைய நிகழ்ச்சிகள் ஆகட்டும் எல்லா இடத்திலும் ஷைத்தான் தஜ்ஜால் மூலமாக எப்படிப்பட்ட வலையைப் பின்னி விட்டான் என்றால், அல்லாஹ்வின் உதவியன்றி அதிலிருந்து தப்புவது சாத்தியமே இல்லை. இப்போது நம் பிள்ளைகளை ஷைத்தானின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றுவது பற்றியதே எல்லாவற்றையும் விட அதிக கவலையாகும். அதற்காக பெற்றோர்களும் ஜமாஅத் அமைப்பும் முயற்சியும் செய்ய வேண்டும். இந்த நோக்கத்திற்காக அறிவுடைய, பருவ வயதை அடைந்த ஒவ்வோர் அஹ்மதியும் இறையச்சத்தின் உயரிய தரத்தைப் பெற வேண்டும். அப்போதுதான் நம்மால் நம் சந்ததிகளை ஷைத்தானின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்ற முடியும்.

ரமலானுக்குப் பிறகும் நாம் நிம்மதியாக அமர்ந்து விடக்கூடாது. மாறாக, நம்முடைய திருக்குர்ஆன் ஞானத்தை, மார்க்க ஞானத்தை அதிகரிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

அவன் என்னை நிராகரிப்பவர்கள் மற்றும் எனக்கு எதிராக இருப்பவர்களைக் காட்டிலும் என்னைப் பின்பற்றுபவர்களை கியாமத் வரை மேலோங்கச் செய்வான் என்பது உண்மைதான்; ஆனால், தன்னுள் பின்பற்றுதலுக்கான முழு தன்மையையும் உருவாக்கிக் கொள்ளாதவரை என் கையில் பைஅத் செய்வதனால் மட்டும் ஒவ்வொரு நபரும் பின்பற்றுபவர்களில் நுழைந்து விட முடியாது என்பது கவனம் செலுத்த வேண்டிய விஷயம் ஆகும். அன்னார் கூறினார்கள்:

தெளிவாகட்டும்! மனஉறுதி மற்றும் துஆவுடன் ஒன்றன் மீது அமல் செய்யாத வரை நாவால் மட்டும் பைஅத் செய்து விட்டோம் என்று ஒப்புக் கொள்வது ஒன்றுமற்றது. எவர் ஒருவர் என்னுடைய போதனைகள் படி

முழுமையாக அமல் செய்கிறாரோ அவர் எனது அந்த வீட்டில் நுழைகிறார். அதைப் பற்றி இறைவனின் கூற்றில் اِنِّیۡ اُحَافِظُ کُلَّ مَنۡ فِی الدَّار என்று வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. அதாவது, உமது வீட்டின் நான்கு சுவற்றுக்குள் இருக்கும் ஒவ்வொருவரையும் நான் காப்பாற்றுவேன்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: லா ஹவ்ல ஓதுவதனால் ஷைத்தான் ஓடுகிறான் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால், வெறும் வாயளவில் லா ஹவ்ல ஓதுவதனால் ஓடிவிடும் அளவுக்கு அவன் சாதாரணமானவன் அல்ல. எவர்களின் அணு அணுவிலும் லா ஹவ்ல ஊடுருவி விடுகிறதோ, எவர்கள் எல்லா நேரமும் இறைவனிடமிருந்தே உதவி ஒத்தாசையை வேண்டி வருகிறார்களோ, அவனிடமிருந்தே பலன் பெற்றுக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் ஷைத்தானிடமிருந்து காப்பாற்றப்படுகிறார்கள் என்பதே உண்மையான விஷயம் ஆகும்.

ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் (அலை) கூறுகிறார்கள்: துஆவில் காந்தவிசை இருக்கிறது. அது அருளையும் கருணையையும் தன்பால் ஈர்க்கிறது. மனிதன் இறைமறைக்கு முன்னுரிமை அளிக்காத வரை, அதற்கு ஏற்பவே செயல்படாத வரை அவனது தொழுகைகள் வெறும் நேரத்தை வீணடிப்பதாகும். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

ஒரு நபிமொழியில் இவ்வாறு வந்துள்ளது: தொழுகை இறை வணக்கத்தின் சத்தாகும். எனவே, நாம் இந்த சத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்யும்பொழுது, பிறகு, தொழுகைக்கான மற்றும் இறை வணக்கத்திற்கான உரிமையையும் நிறைவேற்றக் கூடியவர்களாக ஆவோம். அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறக்கூடியவர்களாக ஆவோம். இல்லை என்றால், வெளிப்படையான தொழுகைகளோ எந்தப் பயனையும் அளிப்பதில்லை. பள்ளிவாசலில் சென்று தொழுதுவிட்டு பிறகு அநீதி அக்கிரமத்தில் உச்சத்தை அடைந்து விடக்கூடிய எண்ணற்ற தொழுகையாளிகள் இருக்கிறார்கள்.

நம்முடைய தொழுகைகள் எப்படிப்பட்டவையாக இருக்க வேண்டும் என்பது பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நினைவில் கொள்ள வேண்டும்! தொழுகை மூலமாகவே அனைத்துப் பிரச்சனைகளும் எளிமையாகி விடுகின்றன. எல்லா இன்னல்களும் அகன்று விடுகின்றன. ஆனால், தொழுகை என்பது சாதாரண மக்கள் சம்பிரதாயமாக தொழக்கூடிய அந்தத் தொழுகையைக் குறிக்காது. மாறாக, எதன் மூலமாக மனிதனின் உள்ளம் கரைந்து விடுகிறதோ, இறைவனுடைய சன்னதியில் விழுந்து மூழ்கி உருக ஆரம்பித்து விடுகிறதோ அப்படிப்பட்ட தொழுகையைக் குறிக்கிறது.

அல்லாஹ் நமக்குத் தொழுகைகளை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! நாம் நம்முடைய சந்ததிகளுக்கும் இப்படிப்பட்ட இறை வணக்கத்திற்கான வழக்கத்தை ஏற்படுத்தக்கூடியவர்களாக ஆவோமாக!

அவை அவர்களும், வருங்கால சந்ததிகளும் நிலைத்திருப்பதற்கான உத்தரவாதம் ஆகி விடட்டுமாக!

தஜ்ஜாலோ இந்தக் காலத்தில் அழியவிருக்கிறான். இது அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அளித்த வாக்குறுதியாகும். நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைந்ததற்கான உரிமையை நிறைவேற்றிய அந்த மக்களில் இணைந்து விட்டால் அது நமது நற்பாக்கியமாக இருக்கும்.

இந்த உரிமையை நிறைவேற்றுவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அழுது மன்றாடுதல், உருகுதல் மற்றும் வேண்டிக் கேட்டல் என்ற ஒரு யுக்தியையும் எடுத்துரைத்துள்ளார்கள். இந்த அந்தஸ்தைப் பெறுவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) கூறுகிறார்கள்: உங்களது இரவு, உங்களது பகல் என எந்த நேரமும் துஆ அல்லாமல் இருக்கக்கூடாது. அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

பாக்கிஸ்தானின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களைத் தீயவர்களின் தீங்கிலிருந்தும், எதிரிகளின் தீங்கிலிருந்தும் பாதுகாத்து வைப்பானாக! பாக்கிஸ்தானில் வசிக்கக்கூடிய அஹ்மதிகளும் தங்களுக்காக துஆ செய்யுங்கள். மூன்று, நான்கு நாள்கள் அல்லது ஒரு வார துஆக்கள் அல்ல; மாறாக, நிரந்தரமாக துஆக்கள் செய்யுங்கள். உங்கள் வாழ்வை இறைவனின் கட்டளைகளுக்கு ஏற்ப அமைத்துக் கொள்வதற்கான உறுதிமொழி எடுத்துக் கொள்ளுங்கள்.

புர்கினாஃபாஸோ, வங்காளதேசம், அல்ஜீரியா மற்றும் உலகின் ஒவ்வொரு நாட்டின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் ஒவ்வோர் அஹ்மதியையும் எதிரியின் தீங்கிலிருந்து பாதுகாத்து வைப்பானாக! அல்லாஹ் நமக்கு நம்முள் தூய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் துஆக்கள் செய்வதற்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக! பிறகு, அந்த துஆக்களை ஏற்றும் கொள்வானாக! ஆமீன்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ

اللّٰهُ فَلَا مُضِلَّ لَهُ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ

اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ

وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)